IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.

Crl.M.P. No. 244/2025

Dated : 03.02.2026

பெயர் :- பொன்னம்மாள்
க/பெ. :- அருண்பாண்டியன்
வயது :- 28/2026

**சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது**.

நான் குடும்பத்துடன் நரசிங்கநத்தம் கிராமத்தில் வசித்து வருகிறேன். இந்த வழக்கின் புகார்தாரர் எனது மாமியார் ஆவார். எங்கள் குடும்பத்திற்கும் ராஜேந்திரன் குடும்பத்திற்கும் ஏற்கனவே இடபிரச்சனை இருந்து வந்தது. கடந்த 29.01.2024 அன்று காலை 08.00 மணியளவில் எனது மாமியார் கடைக்கு சென்று விட்டு வந்தார். அப்போது எதிரி எங்கள் வீட்டு வாசலில் நின்று எனது மாமியாரை குச்சிகாரி, தேவடியா என தகாத வார்த்தைகளால் திட்டினார். அப்போது நான் வெளியில் வந்து எதற்கான எனது மாமியாரை திட்டிகிறீர்கள் என ராஜேந்திரனிடம் கேட்டேன். அப்போது ராஜேந்திரனின் தம்பி அசோக் என்பவர் எனது மாமியாரின் கன்னத்தில் அறைந்தார். ராஜேந்திரன் எனது மாமியாரை எட்டி உதைத்தார். ராஜேந்திரனின் மகள் தரணியும், அவரது மனைவி தனலெட்சுமியும் துடைப்பத்தால் எனது மாமியாரை அடித்தார்கள். சத்தம் கேட்டு எனது கணவர் வெளியில் வந்து பார்த்தார். நான் கர்பமாக இருந்ததால் சண்டையை விலக்கி விடவில்லை. நீங்கள் இங்கு இருக்க முடியாது. இருந்தால் உங்களை கொலை செய்து விடுவோம் என மிரட்டி விட்டு சென்றார்கள்.

எனவே, எதிரி மீது நடவடிக்கை எடுத்து தக்க தண்டனை கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.